# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,771 — 1961 නොවැම්බර් 13 වැනි සඳුදා — 13.11.1961

12,771 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

### தனிப்படுத்தலும் நோய்த்தடையும் பற்றிய கட்டளைச்சட்டம்

**அறிவித்தல்**

1925 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 28 ந் திகதிய 7,481 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரத்தியேக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதிய 9,773 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பிரகடனத்தின்மூலம் திருத்தியமைக்கப்பட்டதுமான தனிப்படுத்தலும் நோய்த்தடையும் பற்றிய கட்டளைச்சட்ட (அதிகாரம் 173) த்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட பிரமாணங்களின் முதலாவது பிரமாணத்தினுல் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு, அலெக்சாந்தர் பெரெரா ஜெயசூரியா, சௌக்கிய அமைச்சராகிய நான், 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் குருநாகல் சௌக்கிய சேவை அத்தியட்சரால் " நோய்ப்பிரதேச " மென வெளிப் படுத்தியமை சம்பந்தமாய் 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ந் திகதிய 12,726 ஆம் இலக்கத்தைக்கொண்ட வர்த்தமானியிலும் 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ந் திகதிய 12,730 ஆம் இலக்கத்தைக்கொண்ட அதிவிசேட வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட எனது உறுதிப்பாட்டினை 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ந் திகதி முதல் இவ்வறிவித்தல் மூலம் தள்ளுபடி செய்கிறேன்.

கொழும்பு
1961 ம் ஆண்டு நவெம்பர் மீ 10 ந் உ.

ஏ. பி. ஜெயசூரியா,
*சௌக்கிய அமைச்சர்.*

11-623.

---

### விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எப்சீ/வீ—எஸ்எப் 1 (38) — **உப உணவுப் பொருட்கள்**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவுடன் 3 (2) ம் பிரிவைச் சேர்த்து வாசிக்குமிடத்து கொழும்புப் பிரிவு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு ஆத்தர் கத்பர்ட் பர்தோலமியூஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1961 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ந் திகதி வெளிவந்த 12,493 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எப்சீ/வீ—எஸ்எப் 1 (37) ம் இலக்க, 1961 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 ந் திகதி கொண்ட உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(ii) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் மொத்த விலையாகத் தற்காலிகமாக விதிக்கப்பட்ட விலையுடன் 2 முதல் 11 ம் பத்திவரை அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகை கூட்டிய விலையே 2 ம், 3 ம், 4 ம், 5 ம், 6 ம், 7 ம், 8 ம், 9 ம், 10 ம், 11 ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடங்களில் 1 ம் பத்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் மொத்த அந்தரின் விலை உடனடியே நடைமுறையாகும் மொத்த விலை யாகவும் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகாது என்றும் விதிக்கிறேன் ;

(iii) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் சில்லறை விலையாக தற்காலிகமாகக் குறிப்பிட்ட விலையுடன் 12 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகையை கூட்டிய விலையைக் குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகையை கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட பொருட்களை கொழும்பு மாவட்ட எல்லைக்குள் (கொழும்பு மாநகர எல்லையைத் தவிர்ந்த) நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன் ;

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(v) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாக பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்கு கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(ix) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்குமிடத்து, அட்டவணையின் 2 தொடக்கம் 12 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 8 ந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கையொப்பமிடப்பட்டது.

எ. சி. பர்தோலமியூஸ்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

அட்டவணை

மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை

| பத்தி 1 பொருளின் விபரம் | பத்தி 2 ஹாப்பிற்றிகம் கோரளை | பத்தி 3 அழுத்குறு கோரளை வடக்கு "அ" | பத்தி 4 அழுத்குறு கோரளை வடக்கு "ஆ" | பத்தி 5 அழுத்குறு கோரளை தெற்கு | பத்தி 6 சியான்னே கோரளை கிழக்கு | பத்தி 7 சியான்னே கோரளை மேற்கு (அதிகாரிபற்று) | பத்தி 8 சியான்னே கோரளை மேற்கு (மெதபற்று) | பத்தி 9 ஹேவாகம் கோரளை | பத்தி 10 சல்பிற்றிக் கோரளை | பத்தி 11 கொழும்பு மாநகர எல்லைகள் தவிர்ந்த கொழும்பு காரியாதிகாரியின் பிரிவு | பத்தி 12 கொழும்பு மாவட்டத் திற்குரிய சில்லறைவிலை (கொழும்பு மாநகர எல்லை தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை | கொழும்பு மாநகர எல்லைகட்குட்பட்ட சில்லறை வியாபாரிகளின் நிறை இறாத்தல் ஒன்றுக்கு கூட்டவேண்டிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| வெங்காயம் (சிறு வெங்காயம், சிக்பெலாபூர் தவிர்ந்த ஏனைய எல்லா ரகங்கள்) | 2 0 | 1 76 | 1 78 | 1 50 | 1 80 | 1 48 | 1 64 | 1 62 | 1 54 | 1 44 | 0 2 |
| உருளைக்கிழங்கு (இந்தியன்) மேட்டுப்பாளையம் | 2 0 | 1 76 | 1 78 | 1 50 | 1 80 | 1 48 | 1 64 | 1 62 | 1 54 | 1 44 | 0 2 |
| உருளைக் கிழங்கு | 2 0 | 1 76 | 1 78 | 1 50 | 1 80 | 1 48 | 1 64 | 1 62 | 1 54 | 1 44 | 0 2 |
| செத்தல் மிளகாய்— | | | | | | | | | | | |
| சன்னம் 1 ம் ரகம் | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| சன்னம் 2 ம் ரகம் | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| முண்டு 1 ம் ரகம் | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| சந்தகா | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| ஜாவா | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| நற்சீரகம் | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| மஞ்சள் | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| கொத்தமல்லி | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| முழுஉழுத்து | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| பாசிப்பயறு | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| துவரம்பருப்பு | 2 0 | 1 76 | 1 78 | 1 50 | 1 80 | 1 48 | 1 64 | 1 62 | 1 54 | 1 44 | 0 3 |
| கடலைப்பருப்பு | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 2 |
| சிந்தாமணிக்கடலை | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| உள்ளி (பம்பாய்) | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |
| புளி | 3 0 | 2 76 | 2 78 | 2 50 | 2 80 | 2 48 | 2 64 | 2 62 | 2 54 | 2 44 | 0 3 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ;இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

II-540

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது